## சுதந்திர நாளில் தேசியக் கொடியேற்றும் உரிமையை – இந்தியாவின்

# ஒவ்வொரு முதல்வருக்கும் பெற்றுத்தந்த காலச்சிற்பி கலைஞர்!

## மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் சைதை தேரடித் திடலில் நடைபெற்ற கலைஞர் பிறந்தநாள் விழாவில் நக்கீரன் கோபால் பேச்சு!

சென்னை, ஜூன் 16 -

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103ஆம்ஆண்டு பிறந்தநாள் விழா வாழ்த்தரங்க நிகழ்ச்சி சைதை தேரடித் திடலில் 3-6-2026 அன்று மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. இவ்விழாவில் நக்கீரன் கோபால் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவ்வுரை வருமாறு:

மே-10ஆம்தேதிஎந்த புண்ணியவான் நேரம் குறித்துக் கொடுத்தாரோ தெரியவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம் இன்றைக்கு வரைக்கும் 40 எண்ணிக்கையில் இருக்கிறது. இதற்கு மேல் இரவு ஆனால் எவ்வளவு கூடும் என்று தெரியாது. இதை எந்த ஜோசியக்காரர் குறித்துக்கொடுத்தாரோ அவரை நீங்கள் பாராட்ட வேண்டும். அவர் நேரம் குறித்துக்கொடுத்தி ருக்கிறார். இந்த நேரத்தில் இந்த சேர்ல போய் உட்காரு என்று.

நான் கலைஞரைப் பற்றித்தான் பேச வந்திருக்கிறேன். வேற எதுவும் பேசவில்லை. போர போக்கில் எதையும் சொல்லாமல் போய்விட்டால், இவர் இப்படி சொல்லாமல் போய்விட்டாரே என்று சொல்ல முடியாதல்லவா?

திருச்சியில் நன்றி சொல்வதற்கு சென்றார்கள். அந்த உரை முடிவில் CONFIDENT ஆக இருங்கள். CONFIDENT ஆக இருங்கள் வெற்றி நிச்சயம் என்று சொல்கிறார். அவருக்கு யாராவது ஒருவர் போய் நீங்கள்தான் முதலமைச்சர் என்பதை சொல்ல வேண்டும். அதை சொல்ல வேண்டும் அல்லவா? ஒருவரும் அதை அவருக்கு சொல்லமாட்டேன் என்கிறார்கள். எதற்கு கான்பிடன்டாக இருங்கள் என்று சொல்கிறார் என்று தெரியவில்லை. இப்போதுதானேதேர்தல்முடிந்திருக்கிறது.

**ஜனநாயகன் பட அதிபருக்கும் கவர்னருக்கும் என்ன சம்பந்தம்!**

மந்திரி சபை அமைப்பதற்கு கவர்னரைச் சந்தித்தவர்கள், ஜனநாயகன் பட அதிபர், மற்றொருவர் விஷ்ணுரெட்டி என்பவர். இவர்கள் இரண்டுபேரும் கவர்னரிடம் என்ன வேலை என்று யாராவது கேட்டார்களா? மந்திரி சபை அமைப்பதற்கும், இவர்கள் போய் கவர்னரை சந்திப்பதற்கு என்ன சம்பந்தம் இருக்கிறது? இல்லை.

இப்போது நமது தலைவர் ஆறு மாதம் பொறுத்திருப்போம் என்று சொல்லி விட்டார். நீங்கள் பொறுத்திருக்கலாம். நாங்கள் பொறுத்திருக்கமாட்டோம். நீங்கள் சும்மா இருக்கலாம். நாங்கள் சும்மா இருக்க முடியாது. நமது அமைச்சரையும் சேர்த்துதான். அவரும் தலைவர் சொன்னமாதிரிதான் சொன்னார். கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. நமது சுப.வீ. அவர்களிடம்தான் புலம்பினேன்.

காலச்சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர், இன்றைக்கு நான் இந்த இடத்தில் நிற்கிறேன் என்றால், அவரில்லாமல் வந்திருக்கமுடியாது. நிச்சயமாக.


கலைஞர் படிக்கும்போது, சீனிவாசன் என்கிற இந்தி பண்டிட் இருந்தாராம். அவர் கலைஞரை இந்தி கத்துக்கொள். கத்துக்கொள் என்று சொல்வாராம். அந்த இந்தி வகுப்பை மட்டும் புறக்கணித்துவிட்டு சென்றுவிடுவாராம். அந்த இந்தி பண்டிட் ஹோமியோபதி மருத்துவர் ஆகிவிட்டாராம். அவர் ஒரு இன்ஸ்டியூட் ஆரம்பிக்கிறார். அந்த இன்ஸ்ட்டியூட்டிற்கு முதலமைச்ச ராகிவிட்ட கலைஞரை சிறப்பு விருந்தினராக அழைத்தாராம். அப்போது வரவேற்று பேசும்போது சீனிவாசன் சொன்னாராம், நான் இந்தி பண்டிட்டாக இருந்தேன். கலைஞர் படித்த பள்ளியில், நான் இந்தி படியுங்க, படிங்க என்று சொன்னேன். அப்போது இந்தி படித்திருந்தால், இப்போது டெல்லி போகும்போது இந்தியிலே நிறைய பேரிடம் பேசலாம் அல்லவா, அதை விட்டுவிட்டார் என்றாராம்.

கலைஞர் பேசும்போது சொன்னாராம், நல்லவேளை உங்கள் பேச்சைக் கேட்கவில்லை. உங்கள் பேச்சை கேட்காமலிருந்ததால்தான் நான் இப்போது முதலமைச்சராக வந்திருக்கிறேன். இல்லையென்றால் நான் ஒரு இடத்தில் கணக்கப்பிள்ளையாக இருந்திருப்பேன் என்று தெரிவித்தாராம்.

**ரீல்சில்தான் ஆட்சியே நடக்கிறது!**

இப்போது வந்திருக்கிற முதலமைச்சர் 5, 10 மணித்துளிகளில் சந்திப்பெல்லாம் கிடையாது. இப்போது எல்லோரும் கேட்கிறார்கள். முதலமைச்சர் சென்றார், செலவு மட்டும் ரூ.50 கோடி ஆகிவிட்டது. பிரதமமந்திரியை பார்த்தார். வெறும் பத்து நிமிடம் என்கிறார்கள். சார் நாங்க வந்து ரீல்ஸில்தான் ஆட்சியையே நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்குத் தேவை இரண்டு நிமிடம்தான். அதிகமாக தேவைப்பட்டால் மூன்று நிமிடங்கள் மட்டும்தான். அதுமட்டும் போதும். ஒன்று பூச்செண்டு கொடுப்பது, வாங்க, பொன்னாடை போர்த்த, அதை திரும்பி வாங்க, உக்கார, பல்லிக்க, எந்திரி, நீ போ என்று அவர் சொல்ல, அவ்வளவுதான். இதுபோதும்சார். இந்த ரீல்ஸ்ஸில் வாழ்க்கையை நடத்திவிடுவோம்.

அது தெரியாமல் நாம். ஏன்? முதலமைச்சர் பிரதம மந்திரியைப் பார்த்தார். ஏன் ஒன்றும் பேசவில்லை. ஏனென்றால் அவர் என்ன முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினா? இல்லை முத்தமிழறிஞரா? இரும்புப் பெண்மணி இந்திராகாந்தியிடமே போய் தமிழ்நாட்டிற்கு தனிக்கொடி வேண்டும் என்று கேட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தக் கொடியின் வடிவத்தையும் கையோடு எடுத்துச் சென்றுவிட்டாராம். உடனே இந்திரா காந்தி, இவர்போல் ஒவ்வொரு மாநிலத்திலேயும் கேட்டார்கள் என்றால் என்ன செய்வது? கொஞ்சம் பொறுங்கள். பிறகு விவாதிக்கலாம் என்று சொல்லிவிட்டாராம். அப்படியில்லையென்றால் சுதந்திரத்தினத்திற்கு தேசியக் கொடியேற்றுகிற உரிமையாவது கொடுங்கள் என்று



தெரிவித்து அந்த உரிமையைப் பெற்றவர் கலைஞர் அவர்கள்.

வர இருக்கிற ஆகஸ்டு-15 அன்று சுதந்திரத்தினத்திற்கு தாம்தான் முதலமைச்சர் என்பதையே மறந்திட்டு இருக்கிறவர், ஆக.15 அன்று கொடியேற்ற வேண்டும். அந்த கயிரைத்தொடும்போது ஒரு ஷாக் அடிக்கும் பாருங்கள். அந்த ஷாக்தான் முத்தமிழறிஞர் கலைஞர் வாங்கிக்கொடுத்தது. அவர் இல்லையென்றால் அந்த உரிமையைப் பெற்றிருக்க முடியாது.

**முதல் வரிசையில் திரிஷா! 3வது இடத்தில் தமிழ்தாய் வாழ்த்து!**

ஒரு மாநில முதலமைச்சர் பிரதமரிடம் எந்த உரிமையைப் பெற வேண்டும் என்பதை தொடங்கி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதேபோல் தான் தமிழ்த்தாய் வாழ்த்தை அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் முதலில் பாட வேண்டும் என்ற உத்தரவைப் போட்டவர் முத்தமிழறிஞர். முதல்வரிசையில் திரிஷாவையும், மூன்றாவது இடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைப் பாடியதையும் இந்த அரசாங்கத்தில் பார்த்துவிட்டோம். ஏனென்றால் உரிமைகளைப் போராடி பெற்றவர்களுக்குத்தான் தெரியும் அந்த வலி. அதன்பிறகு எல்லோரும் சொல்கிறார்கள் முன்வரிசையில் திரிஷா வரக்கூடாது, தமிழ்த்தாய் வாழ்த்துதான் அரசு நிகழ்ச்சிகளில் பாட வேண்டும் என்று சொன்னபிறகு, அடுத்த நிகழ்ச்சியில் நாங்கள் தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடுவோம் என்று தெரிவித்தார்கள்.

**இந்த நாடு எதை நேக்கிப் போய்க்கொண்டிருக்கிறது!**

கடைசியாக நன்றிசொல்கிறக் கூட்டத்தில் அங்கேபோய் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடினார்கள். எப்போதும் நல்லவற்றையே அனுபவிக்க முடியாதல்லவா? கெட்டதையும் அனுபவிக்க வேண்டுமல்லவா? இதையெல்லாம் பார்க்கணும் என்பது ஒரு விதமான விதி. சுப.வீ.க்கு விதிமேல் நம்பிக்கை இல்லை. நல்லதையே பார்த்தியிருக்கிறோம். இப்போது பட்டுவேட்டி கட்டி வந்ததையே ரீல்ஸ் போடுகிறார்கள். அதை பார்க்கிறார்கள். இந்த நாடு எதைநோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

மேகதாது, மேகதாது என்றார்கள். அது சரி. மேகதாது என்றால் என்னவென்று முதலில் சொல்லிக்கொடுக்க வேண்டுமல்லவா? சேர்ந்தவர்களெல்லாம் சிவலிங்கமாக இருந்தால் என்ன செய்வார்கள்? மேகதாதுவிற்கு யார் போராடுவது? கர்நாடகக்காரன் நான் அணைக் கட்டுவேன் என்கிறான். தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு காதுகேட்கவில்லை.

**தமிழுக்காகவே உழைத்த மகான் கலைஞர்!**

கலைஞரோடு சேர்ந்து கொஞ்சநாள் பணியாற்றியிருக்கிறோம். மேடையில் இருக்கிற அத்துணைபேரும் கலைஞரோடு இருந்து பணியாற்றியவர்கள்தான். ஆனால் ஒரு மனிதன் 85 வயது வரை ஒரு நாளைக்கு நான்கு அல்லது ஐந்து மணிநேரத்திற்கு உறங்கிவிட்டு, மீதியிருக்கிற நேரங்களில் தமிழர்களுக்காகப் பணியாற்றிய மனிதன், அது பதவியில் இருந்தாலும் சரி, பதவியில் இல்லையென்றாலும் சரி, அவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழுக்காகவே உழைத்த ஒரு மகான்தான் கலைஞர். அவருக்குத்தான் இன்றைக்கு வாழ்த்தரங்கம்.

1962இல் சைதாப்பேட்டையில் வெற்றி பெறுகிறார். 1963இல் கடற்கரையில் கூட்டம், வரயிருக்கிற 1967 தேர்தலில், எப்படி நாம் தேர்தலை சந்திப்பது என்று கூட்டம் போடுகிறார்கள். அப்போது கலைஞர்தான் சொன்னாராம், வரஇருக்கிற 1967 தேர்தலில் நாம் எத்தனைத் தொகுதிகளில் போட்டியிடுவது என்று கணக்கெடுக்க சொல்கிறார் கலைஞர். 200 தொகுதிகளில் போட்டியிடப்போகிறோம். ஒரு தொகுதிக்கு ரூ.5000 செலவாகும் என்று வைத்துக் கொண்டாம் என்றால், 200 தொகுதிக்கும் நமது தேவை பத்து லட்சம் ரூபாய். பத்து லட்சம் ரூபாயை யார் திரட்டப்போகிறோம் என்று கலைஞர் கேட்டார்.

அப்போது ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கிறார்களாம். இப்போதுதான் வெற்றிபெற்று வந்தோம். ஒரு ஆண்டு தான் ஆகிறது. 1967 வருவதற்கு இன்னும் நிறைய ஆண்டுகள் இருக்கிறது. அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள் என்கிறார்களாம். இல்லை திட்டமிட வேண்டும்.

**சைதாப்பேட்டை தொகுதி வேட்பாளர் ரூ.11 லட்சம்!**

1966ஆம் ஆண்டு வளசரவாக்கத்தில் ஒரு சிறப்பு மாநாடு போடுகிறார்கள். கலைஞர் மாநாட்டில் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிவிடுகிறார். அந்த மாநாட்டில் ரூ.11 லட்சத்தைத் திரட்டி அண்ணாவிடம் கொடுத்துவிடுகிறார் கலைஞர். 1967 தேர்தலில் வேட்பாளர் தேர்வு வருகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் யார் யார் போட்டியிடுகிறார்கள் என்று சொல்லும்போது, சைதாப்பேட்டை, சைதாப்பேட்டை என்று இரண்டுதடவை அறிவிக்கிறாராம் அறிஞர் அண்ணா. இரண்டாவது தடவை சைதாப்பேட்டையை குறிப்பிட்டு அவர்சொன்ன வார்த்தை 11 லட்சம் என்று தெரிவித்தாராம்.

இந்த சைதாப்பேட்டைத் தொகுதியில் கலைஞர் போட்டியிடும்போது அவருக்கு வைத்த பெயர் 11 லட்சம். அப்போது வெற்றிபெற்று கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராகி, தமிழ்நாட்டிற்கு உழைத்தது இந்த பதவியிலிருந்து ஆரம்பித்தது தான். அடுத்து திருவாரூக்கு செல்கிறார். கலைஞரின் 7ஆம் வகுப்பு ஆசிரியர்சேதுராமய்யர். படித்து முடித்துவிட்டார். மீண்டும் அதே ஊருக்குச் செல்கிறார். ஆசிரியர் கூட்டணி மாநாடு நடக்கிறது. அதற்கு கலைஞர் செல்கிறார். அந்த மாநாட்டில் சேதுராமய்யர் எங்கே என்று கேட்கிறார்? அவர் ஓய்வு பெற்றுவிட்டார் என்று சொல்கிறார்கள்.

கலைஞர் படித்த பள்ளியில்தான் அந்த மாநாடு. ஓய்வுப் பெற்றுவிட்டால் விட்டுவிடுவீ ர்களா என்று கேட்கிறார் கலைஞர். கூட்டம் முடிந்தவுடன், கலைஞர் நண்பர் தென்னன் அவர்களை கலைஞர் கூப்பிட்டு, சேதுராமய்யர் வீட்டிற்குச் செல்வோம் என்று கூறி, சென்றவுடன் அவர் வீடு, உட்காருவதற்குக் கூட இருக்கை இல்லையாம். பரபரத்துப்போய் இருந்தார்களாம். வேகமாகப் போய் பெஞ்சில் கலைஞர் அமர்ந்துவிட்டாராம். அப்போது கலைஞர் முதலமைச்சர்.

என்ன திடீர் என்று வந்திருக்கிறீர்கள் என்று ஆசிரியர் கேட்டாராம். எனக்கு தகவல் தெரியவில்லை என்று தெரிவித்தாராம். உங்களிடம் படிக்கும்போது எனக்கு ஒரு சிறிய நிகழ்வு நினைவிருக்கிறது என்று கலைஞர் தெரிவித்தாராம். என்ன சொல்லு என்று ஆசிரியர் சொன்னவுடன், 55 எண்ணிக்கையில் கத்தையான நோட்டுக்கள் எல்லாம் என்னிடம் கொடுத்து, நீ போகும்போது வீட்டில் கொடுத்துவிட்டு போ என்று சொல்லிவிடுவீர்கள். உங்க வீடு இருப்பது ரொம்பதூரம். நோட்டுகள் அதிகம் கனமானவை. நான் தலையில் சுமந்துகொண்டு உங்களைத் திட்டிக்கொண்டே செல்வேன். இனி மேல் இவரிடம் படிக்கவே கூடாது என்று சொல்லிக்கொண்டே செல்வேன். நாளைக்குக் கொடுத்தால் வாங்கக் கூடாது என்று நினைத்துக்கொண்டே செல்வேன்.

வீட்டில் கொடுத்தவுடன், இவ்வளவு கனமாக இருக்கிறதே என்று அம்மா அவர்கள் வாங்கிவைத்துக்கொண்டு, டேய் உள்ளே வாடா, ஒரு கப் காபி சாப்பிட்டுவிட்டு போ என்று சொன்னார்கள். அப்போதுதான் காபி எப்படி இருக்கவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டேன். இதுவரைக்கும் இப்படி ஒரு காபியை நான் குடித்ததே இல்லை என்று கலைஞர் சொன்னாராம்.

அடுத்தநாள் உங்களிடம் நான் கேட்டேன், சார், இன்றைக்கு நோட்டுகள் இல்லையா? நான் வீட்டில் கொண்டு போய் கொடுக்க என்று கேட்டேன். அதற்கு நீங்கள், நோட்டுகள் இல்லை. ஆனால் நீ வீட்டிற்குப் போ. உனக்கு வேலை ஏதோ இருக்கிறதாம் என்று தெரிவித்தாராம். அப்போது மீண்டும் நீங்கள் அனுப்பினீர்கள். போனேன் ஒரு காபி கொடுத்தார்கள். குடித்துவிட்டு வந்தேன். அப்போது தினந்தோறும்நீங்கள்வீட்டிற்குபோய்விட்டுபோ என்று சொல்வீர்கள். அப்போது தினந்தோறும் நான் வீட்டிற் குச் சென்று காபி சாப்பிட்டு செல்வேன் என்று கூறினாராம். அதுபோல் காபியை இன்றுவரை நான் சாப்பிட்டதே இல்லை என்று கலைஞர் சொன்னாராம். செய்நன்றி என்பது இருக்கிறதல்லவா? அந்தக் கருத்திற்குதான் வருகிறேன்.

2010ஆம் ஆண்டு பெரியார் விருது கொடுத்தார்கள். முதல்நாள் மாவட்ட ஆட்சியர் போன்செய்தார். பெரியார் விருது என்பது மிகப்பெரிய விருது. அரசாங்க வாகனத்தில் நாங்களே வந்து அழைத்துச் சென்று, விருது பெற்றவுடன் வீட்டிற்கு அழைத்துச்சென்று விட்டுவிடுவோம் இது அரசாங்க மரபு. அப்போது கலைஞருக்கு போன்செய்துவிட்டு, சென்றேன். அவரைப் பார்த்து நன்றி சொல்வதற்கு.

ரொம்ப நன்றிங்க அண்ணே. பெரியார் விருது கொடுத்தமைக்கு என்று சொன்னேன். அப்போது நான் சொன்னேன். என்னை வீட்டிலிருந்து அழைத்துச்செல்வதற்கு பதிலாக என் தந்தையை அழைத்துச்செல்லுங்கள் என்று தெரிவித்தேன். சரியென்று சொல்லிவிட்டு, சண்முக நாதனிடம் தெரிவித்தார் கலைஞர் அவர்கள்.

1967-68ஆம் ஆண்டு வாக்கில் எனது அப்பா நெடுஞ்சாலைத்துறையில் பியூனாக வேலைபார்த்தார். அவருக்கு சம்பளம் அப்போது ரூ.150 வாங்கிக்கொண்டிருந்தார். அப்போது ரூ.30 பள்ளிக்கட்டணம் கட்டாததால் என்னை வெளியே நிறுத்திவிட்டார்கள். அப்போது வீட்டில் வந்து சொன்னவுடன், அப்போது அப்பா அலுவலகம் வந்து வாங்கிச்செல்லும்படி தெரிவித்துவிட்டார்கள். காலையில் அலுவலக வாசலில் நின்று, கார் வந்து வாசலில் நிற்கும். அப்பா வந்து காரைத் திறந்து, உள்ளேயிருந்து ஒரு உதவிப்பொறியாளர் வருவார். அவர் வைத்திருந்த ஃபைல், சாப்பாடுக்கூடை வாங்கிச்செல்வார்.

அடுத்து ஜீப்பில் ஒருவர் வருவார். அப்போதும் அப்பா கதவைத் திறந்து, அதேபோல் செய்வார். அடுத்து ஒரு ஜீப் வரும் அந்தக் கதவை அப்பா திறப்பார்கள். அதில் ஒரு கான்ட்ராக்டர் வருவார் அவர்தான் தங்கபாண்டியன். பையன் யார் என்று என் அப்பாவிடம் கேட்டு, தங்கபாண்டியன் அவர்களிடம் ரூ.50 வாங்கி என் கையில் கொடுத்து, ரூ.20 அம்மாவிடம் கொடு, ரூ.30 பள்ளிக்கட்டணம் கட்டச்சொல்லி விடுவார். இதுதான் அப்போதைய காலம்.

அடுத்து 2010 ஆகஸ்ட் - 15. அதேபோல் மதியம் 3 மணிக்கு அரசு வாகனம் வீட்டிற்கு வருகிறது. நான்போய் அப்பாவிடம் சொல்லி, உங்களை அழைத்துச்செல்ல வருகிறார்கள் என்று தெரிவித்து, நாங்கள் எல்லாம் வேடிக்கை பார்க்கிறோம். காரில் வந்த மாவட்ட ஆட்சியர் கார் கதவைத் திறக்கிறார். எனது தந்தை காரில் ஏறுகிறார். மாவட்ட ஆட்சியர் காரின் கதவை மூடிய பிறகு கார் செல்கிறது. இதுதான் கலைஞர்.

ஒரு காலத்தில் எனது தந்தை அவரது மேலதிகாரிக்கு கதவைத் திறந்தார். அதே அப்பாவுக்கு ஒரு கலெக்டர் கார் கதவைத் திறக்கிறார். என்னடா செய்தார் கலைஞர் என்று கேட்கிறார்கள் அல்லவா? என் வாயில் ஏதாவது வந்து விடப்போகிறது? நான் முதலமைச்சர் இல்லை அல்லவா? அதனால் பேசலாம். அப்படியொரு மாற்றத்தை செய்தார் அல்லவா? அவர்தான் கலைஞர். காலச்சிற்பி.

இவ்வாறு நக்கீரன் கோபால் அவர்கள் உரையாற்றினார்.

---

## தி.மு.க. இலக்கிய அணி முன்னாள் நிர்வாகி

# மதுரை ம.நடராசன் மறைவு!

## கழகத்தினர் இறுதி அஞ்சலி!

*மதுரை, ஜூன்.16-*

*மதுரை மாவட்ட முன்னாள் இலக்கிய அணி அமைப்பாளரும் மதுரை மாவட்ட அனைத்து பட்டு கூட்டுறவு சங்கத் தலைவராக இரண்டு முறை கழகத்தின் சார்பாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று 10 ஆண்டுகள் பொறுப்பில் இருந்தவருமான ம.நடராசன் அவர்கள் உடல் நலக்குறைவால்*



*13-6-2026 அன்று மதுரையில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*தீவிர திராவிட இயக்க கொள்கைவாதியும், கலைஞரின் பற்றாளராக கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவருமான மறைந்த ம.நடராசன் அவர்களுக்கு கழக நிர்வாகிகள் பலரும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

---

## சிவகங்கையில் பெண் போலீசுக்கு

# பாலியல் தொல்லை கொடுத்த மூன்று பேர் கைது!

*சிவகங்கை .ஜூன் 16-*

*சிவகங்கை நகர் ஆயுதப் படை போலீஸில் 30 வயது பெண் போலீஸ்பணியாற்றி வருகிறார் . இவர் திருமணம் ஆனவர் .இவருக்கும் ராபின் என்ற லாரி டிரைவருடன் நீண்ட நாட்களாக பழக்கம்உள்ளது. ராபின் நேற்று முன்தினம் மாலையில் பெண் போலீசாருக்கு போனில் தொடர்பு கொண்டு உங்களை அவசரமாக சந்திக்க வேண்டும் என்று கூறினார்.*

*திருப்பத்தூர் சாலையில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருமாறு கூறினார். அதை நம்பிய அந்த பெண் போலீஸ் இரவில் திருப்பத்தூர் சாலையில் சென்று கொண்டிருந்த பொழுது அவரது நண்பர் ராபின் பேசியவாறு நல்ல இருள் சூழ்ந்த பகுதிக்கு அழைத்துச் சென்றார். பேசிக் கொண்டிருந்த வாறு பெண் போலீசாரிடம் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். அதே நேரத்தில் அங்கு மேலும் வந்த இரண்டு பேர்கள் சேர்ந்துமூன்று பேரும் பெண் போலீசை பாலியல் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்கள். இதனால் கூச்சலிட்டபடி பெண் போலீஸ் அவர்களிடமிருந்து தப்பி ஓடி அருகில் உள்ள வீட்டில் தஞ்சம் அடைந்தார். வீட்டில் உள்ளவர்களிடம் மூன்று பேர் தன்னிடம் நடந்து கொண்டதை கூறி உள்ளார்.*

*அவர்கள் இந்த மூன்று பேரையும் பிடிக்க சென்ற பொழுது அந்த மூன்று இளைஞர்கள் தப்பி ஓடி விட்டார்கள் .இது குறித்து 100 அவசர போலீஸிற்கு கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தகவல் கொடுக்கப்பட்டது. அந்த பகுதியில் ரோந்து சென்றிருந்த அவசர போலீஸ் விரைந்து வந்து பெண் போலீசாரை மீட்டனர்.*

*தொடர்ந்து அவர்கள் மாவட்ட எஸ்.பி. சிவபிரசாத்திற்கு தகவல் கொடுத்தனர். மாவட்ட எஸ்பி சிவப்பிரசாத் உத்தரவின் பேரில் சிவகங்கை டி.எஸ்.பி .அமல அட்வின் ம களிர் காவல் நிலைய ஆய்வாளர் மாரிஸ்வரி ஆகியோர் இது குறித்து விசாரணை நடத்தி மூன்று பேரை கைது செய்தார்கள். இதில் திருப்புவனம் தாலுகா துதை கிராமத்தை சேர்ந்த லாரி டிரைவர்ராபின், 28 சித்தாலங்குடியைச் சேர்ந்த த.வெ.க. பிரமுகர் மகாராஜா வயசு 29 கல்லூரி மாணவன் ஹரிஷ் 21ஆகிய மூன்று பேரை கைது செய்துள்ளார்கள்.*

*இதில் ராபின் பெண் போலிசுடன் நெருங்கி பழகியதாக கூறப்படுகிறது. இந்த மூன்று பேரும் பெண் போலீசாரை அழைத்து இத்தகைய பாலியல் செயலில் ஈடுபட்டது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள். தலைநகரில் பெண் போல் சாரருக்கு ஏற்பட்ட இந்த பாலியல் சம்பவம் இப்பகுதியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.*



கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் நகர மன்றத் தலைவர் (பொ) சாவித்திரி கடலரசு மூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அப்போது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் படத்தை வைத்து கூட்டத்தை தொடங்கினார். உடன் கவுன்சிலர்கள் வேல்மணி, பாலாஜி, ஹேமாவதி பரந்தாமன், சுனில் குமார், மீன் ஜெயக்குமார், செந்தில் குமார், பிர்தோஸ்கான் உள்ளிட்ட கழக கவுன்சிலர்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம்,பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் நிவேதா எம். முருகன் தனது பூம்புகார் தொகுதி குத்தாலம் வடக்கு ஒன்றியம் திருவலங்காடு பகுதியில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் குத்தாலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கு. வைத்தியநாதன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெடி எஸ், பாலமுருகன் மற்றும் ஒன்றிய கழக கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள்உள்ளனர்